டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in




agridoctor.in | 8.8.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 043 - Madurai | Online Edition

### பால்பதப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தில்

# சுமார் 12.52 இலட்சம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள்

புது தில்லி, ஆக.7

பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டம் ஜனவரி 21, 2017 முதல் ஜனவரி 30, 2024 வரை நடைமுறையில் இருந்தது. இது ஒரு உள்கட்டமைப்பு மேம் பாட்டுத் திட்டமாகும். இது பால் பதப்படுத்துதல் மற்றும்




குளிரூட்டும் ஆலைகளை நவீனப்படுத்துவதையும், மதிப்புக் கூட்டலை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு பயனளிப்பதும், அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையை வழங்கு வதும், திட்டப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 2024 ஜூன் நிலவரப்படி, மொத்தம் 42.48 லட்சம் உற்பத்தியாளர் உறுப்பினர்களில் சுமார் 12.52 லட்சம் பெண் பால் உற்பத்தியாளர்கள் பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். அதாவது மொத்த உறுப்பினர்களில் 30 சதவீதம் பேர் பெண் பால் உற்பத்தி யாளர்கள் ஆவர்.

இத்திட்டம் கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுடன் இணைக்கப்பட்டு, அதன் செயல்படுத்தல், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு (2024-2026) ரூ.29,110.25 கோடி செலவில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலவரப்படி, கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் ஒரு தனிப்பட்ட தொழில்முனைவோராக 6 பெண்களுக்கு உதவி வழங்கியது.

இதனை மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் நேற்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்தார்.

## மாடித்தோட்ட காய்கறிகள் சாகுபடி செய்யும் செயல்விளக்க பொருட்கள் அடங்கிய பெட்டி வழங்கல்




திண்டுக்கல், ஆக.7

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான மாடித்தோட்ட காய்கறிகள் சாகுபடி செய்யும் செயல் விளக்க பொருட்கள் அடங்கிய பெட்டி அட்மா திட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் அறிவுரையின் படி இந்த மாடித்தோட்ட தொகுப்புப் பெட்டியில் கட்டர், காய்கறி விதைகள், கரண்டி காயர் பித் கட்டி போன்றவற்றை ஒருங் கிணைந்த விவசாயிகள் கலைஞர் திட்ட பகுதி விவசாயிகளுக்கு கொடுத்து அதன் பயன்களை பற்றி கூறி வீட்டிலேயே தங்கள் அன்றாடம் தேவைப்படும் காய்கறிகளை மாடியிலேயே போட்டு விளைவித்து பயன் பெறலாம் என கூறி பயனாளி யோகேஷ் பன்றிமலைக்கு கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் கார்த்தி உதவி வேளாண்மை அலுவலர் செந்தில், உதவி தோட்டக்கலை அலுவலர் ராஜா, காந்திகிராம வேளாண் பல்கலைக்கழக கிராம தங்கல் மாணவிகள் புவனேஸ்வரி, பவானி, அபிதா தேவி, அக்ஷிதா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு, அருண்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மல்பெரி சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன வெண்பட்டு புழு வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, ஆக.7

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் 2024-25ம் ஆண்டு நிதியின் கீழ் சாலிசந்தை கிராமத்தில் பட்டு வளர்ச்சி துறை மூலம் மல்பெரி சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன வெண்பட்டு புழு வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 7.8.24 அன்று மா.கணபதி, உதவி இயக்குநர், தலைமையில் நடைபெற்றது. தொ.சுமதி, உதவி ஆய்வாளர், வரவேற்புரை ஆற்றினார்.

உதவி இயக்குநர், விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பின் முக்கியத்துவம், மல்பெரி இனங்கள், மல்பெரி நடவு முறை, பட்டு உற்பத்தி நிலைகள், உரம் மற்றும் தொழு உரமிடுதல், நோய் தாக்குதல், முட்டையைப் பாதுகாத்தல், முட்டைகளிலிருந்து புழுக்களைப் பிரித்தல், உணவு அளித்தல், கிருமி நீக்குதல், பட்டுக்கூடு அறுவடை மற்றும் பிரித்தல் விற்பனை மற்றும் பட்டுச் வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தபடும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

பட்டு வளர்ப்பு செய்யும் முன்னோடி விவசாயிகள் தங்கள் அனுபவங்களை எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இளநிலை ஆய்வாளர்கள் ஜிங்கந்தர் மற்றும் முத்து முகுந்தன் பயிற்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். ஹேமலதா, வட்டார தொழில் நுட்ப மேளாலர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றியுரை வழங்கினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பெருந்துறை வட்டாரத்தில் இயற்கை வேளாண்மை இடுபொருள்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி



ஈரோடு, ஆக.7

ஈரோடு வட்டாரம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கருக்குபாளையம் வருவாய் கிராமத்தில் 7.8.24 அன்று உழவர்களுக்கு இயற்கை வேளாண்மையில் இடுபொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி நடைபெற்றது.

பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையேற்று பேசுகையில் இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் இயற்கை விவசாயி கணேசன், பேசுகையில் அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜீவாமிர்தம், மற்றும் பூச்சி மேலாண்மை, களைமேலாண்மை குறித்து விவசாயிகளிடம் கூறினார்.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் அருள் மொழிவர்மன், பேசுகையில் துவரை வரிசை நடவு முறைகள் பற்றியும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் வேளாண் கிடங்கில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி பேசுகையில் நுண்ணீர் பாசனம் மற்றும் உணஆ முளையஐ பற்றியும் விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் செய்திருந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 07.08.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 50 | 55 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 55 | 60 | 57 | உருளை (கோலார்) | 40 | 45 |
| 1B | கத்திரி(Nadu) | 65 | 70 | 57A | உருளை(ஊட்டி) | 75 | 80 |
| 2 | வெண்டை | 30 | 34 | 58 | மேரக்காய் | 28 | 32 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 80 | 85 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 55 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 65 |
| 6 | புடலை | 42 | 46 | 62 | நூல்கோல் | 50 | 60 |
| 7 | பீர்க்கன் | 30 | 34 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 35 | 40 |
| 9 | பாகற்காய் | 50 | 58 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 30 | 36 | 66 | காளிபிளவர் | 48 | 54 |
| 11 | பூசணி | 35 | 38 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 28 | 68 | பூண்டு | 190 | 275 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 56 | 62 | 69 | இஞ்சி | 130 | 135 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 88 | 94 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 36 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 65 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 45 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 60 | 64 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 45 | 50 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 34 | | | | |
| 21 | மாங்காய் | 0 | 0 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 68 | 72 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 80 | 90 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 40 | 46 | 91 | பூவன் | 45 | 52 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 35 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 28 | 32 | 97 | செவ்வாழை | 80 | 87 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 0 | 0 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 28 | | | | |

# தலைவாசல் வட்டாரத்தில் அங்கக இடுபொருட்கள் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஆக.7

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் தியாகனூர் கிராம விவசாயி களுக்கு அங்கக இடுபொருட்கள் உற்பத்தி பயிற்சி வழங்கப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் பயிற்சிக்கு தலைமை தாங்கினார். இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார்.

வட்டாரத் தொழில்நுட்பம் மேலாளர் சக்தி அனைவரையும் வரவேற்று பேசினார். மண் மாதிரி எடுத்தலின் அவசியம், உயிர் உரங்களை உபயோகிப்பதன் முக்கியத்துவம் பற்றி பேசினார்.

இயற்கை விவசாயி மற்றும் உழவர் உற்பத்தி குழு தலைவர் ராஜேந்திரன் பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், ஐந்திலை கரைசல், இயற்கை பூச்சி விரட்டி மற்றும் மண்வள மேலாண்மை, இயற்கை சாகுபடி தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு தனது அனுபவத்தை எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் கார்த்தி வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார்.

பட்டு வளர்ச்சி துறை அலுவலர் சத்யமூர்த்தி பட்டு வளர்ப்பு சாகுபடி தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜலட்சுமி வேளாண் வணிகத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் முத்துவேல் ஆத்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், உழவன் செயலி பயன்படுத்தும் முறை பற்றி கூறியதுடன் பயிற்சி கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# எஸ்.புதூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஆக.7

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கான உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி மானாவாரி நிலத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் வேளாண் விரிவாக்க மையம் எஸ்.புதூரில் 29.7.24 அன்று நடத்தபட்டது.





இப்பயிற்சிக்கு எஸ்.புதூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.அம்சவேணி, பயிற்சியினை தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கினார். தோட்டக்கலைதுறை உதவி இயக்குநர் சரவணன், தோட்டக்கலைத் துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் மற்றும் மானிய விலைகள் பற்றியும் அதன் விபரங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

ப.கார்த்திகா, ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம் பற்றியும் அதன் மூலம் வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பயிற்சிக்கு குன்றக்குடி உதவி பேராசிரியர் விமலேந்திரன் கலந்து கொண்டு பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் பயிர்கள் வளர்ச்சி முறை மற்றும் தீவன பயிர்கள் சாகுபடி முறை செய்யும் முறை மற்றும் பண்ணைகுட்டைகள் அமைப்பதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பாலமுருகன், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதற்கு தேவைப்படும் ஆவணங்கள் பற்றியும் அதன் வழிமுறைகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் அழகர், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தபடும் அனைத்து திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாகஎடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அட்மா திட்டம் பற்றியும் அதன் மூலம் நடத்தபடும் விவசாயிகள் பயிற்சியிகள் மற்றும் செயல்விளக்கம் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். பயிற்சிக்கு உண்டான ஏற்பாடுகளை விஜய் ஆனந்த் உதவி தொழில் நுட்ப மேலாளர் செய்திருந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# சுண்ணாம்பு மண் மேலாண்மை உத்திகள்!

கால்சியம் கார்பனேட் (Free Calcium Carbonate) மண்ணில் அதிகளவில் உள்ள பொழுது பயிர் விளைச்சலுக்கு இடர்பாடுகளை ஏற்படுத்தும். இவ்வகையான மண் சுண்ணாம்பு பாறைகள் மற்றும் சிதைந்த பாறையிடுக்குகளிலிருந்து உருவாகின்றன. (Chalk, MarL, Lime stone and Phosphates) இம்மண்ணுடைய கார அமிலத்தன்மை பொதுவாக 7.6 முதல் 8.3 இருக்கும். மண்ணில் உள்ள அதிகளவு கால்சியம் கார்பனேட்டானது, நைட்ரஜன், பாஸ்பரஸ், மெக்னீசியம், பொட்டாசியம், இரும்பூ மாங்கனீசு, துத்தநாகம் மற்றும் காப்பர் தாதுக்களின் வேதியியல் மற்றும் கிடைக்கையினை பாதிக்கும். இம்மண் வகையினை கீழ்க்காணுமாறு மேலாண்மை செய்திடலாம்.

**சுண்ணாப்பு நில மேலாண்மை உத்திகள் / நிலச் சீர்திருத்தம்**

1. அதிக அளவில் பசுந்தாள் / தொழு உரமிடவும்.

2. தக்கைப் பூண்டு சாகுபடி செய்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்யவும்.

3. ஏக்கருக்கு 5 டன் அளவில் கரும்பாலைக் கழிவு இடவும்.

4. பாசன நீர் தேங்குவதை தவிர்க்கவும்.

5. ஏக்கருக்கு பரிந்துரை அளவு கந்தக உரம் இடவும்.

6. கந்தகம் கலந்துள்ள உரங்களையே பயன்படுத்தவும். (எ.கா. பாக்டம்பாஸ்/பாரம்பாஸ்).

7. உரங்களை பயிருக்கேற்ப, பரிந்துரைப்படி பிரித்து இடவும்.

8. நுண்ணூட்ட உரங்களான துத்தநாகம், தாமிரம், இரும்பு போன்ற சத்துக்கள் பயிர்களுக்கு கிடைத்திட உரிய நுண்ணூட்டக் கலவையினை இடவும்.

9. தழைச்சத்திற்கு அம்மோனியம் சல்பேட் / அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் உரத்தினையும், மணிச்சத்திற்கு அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் / டிஏபி / காம்ப்ளக்ஸ் உரத்தினையும், சாம்பல் சத்திற்கு பொட்டாசியம் சல்பேட் உரங்களையும் பயன்படுத்துவதால் உர உபயோகத்திறன் அதிகரித்து பயிர் விளைச்சல் அதிகரித்து விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

# கோ.எப்.எஸ் 31 - தீவனப்பயிர் பற்றி தெரியுமா?

இன்று ஆடு, மாடுகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பது அரிதாக உள்ளது. ஆம், முன்பெல்லாம் கிராமப்புறங்களில் மாடுகளை மேய்ச்சலுக்கு இரண்டு மூன்று பேர்கள் ஊர்காலி மாடு மேய்ச்சலுக்கு அனுப்பப்படும் மாடுகளும், ஆடுகளும் காலாற நடந்து மேயும். அவற்றின் உடல் நலமும் பேணப்படும்.





இன்று அவ்வாறாக இல்லை. மேய்ச்சல் நிலமெல்லாம் வீட்டு மனைகளாகி விட்டன. எனவே கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பதில் சிக்கல். வீடுகளில் கொட்டகை அமைத்து தான் வளர்க்கப்படுகிறது. அவற்றிற்கு கண்டிப்பாக பசுந்தீவனம் தேவைப்படுகிறது. அந்த வகையில் 2014ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கலப்புரகம் தான் இந்த ளீநு.ய் றீ 31 தீவனப்பயிர்.

**கோ.எப். எஸ் 31 அறிமுகம்**

இந்த புல் சோளம் மற்றும் சூடான் புல் இரண்டின் கலப்பினமே. விதையளவு ஏக்கருக்கு மிகக்குறைவு வெறும் 4 கிலோ மட்டுமே, ஏக்கருக்கு ஆண்டுக்கு 70 டன் வரை மகசூல் கொடுக்க வல்லது. இது ஒரு பல்லாண்டு பயிர் (PERIANNUALS). இதில் புரத சத்து 9.86% யும் நார்சத்தும் 20% உலர் பொருளின் அளவும் 26% உள்ளது.

**சிறப்பியல்புகள்**

ஒருமுறை பயிரிட்டு நன்றாக பராமரித்தால் 5 ஆண்டுகள் வரை தீவன அறுவடை செய்யலாம். பயிர்கள் நன்றாக வளர்ந்து பூக்கள் தோன்றும் தருணத்தில் அறுவடை செய்யலாம்.

**எப்போது அறுவடை செய்யலாம்?**

முதல் அறுவடை 60-65வது நாளிலும் பின்னர் மாதத்திற்கு ஒரு முறையும் அறுவடை செய்து கால்நடைகளுக்கு உணவாக வழங்கலாம். ஆடு, மாடுகளுக்கு தேவையான அனைத்து சத்துகளும் நிறையவாகவே கிடைக்கும்.

**எவ்வளவு அளவு பசுந்தீவனம் கொடுக்கலாம்?**

பொதுவாக மாடுகளுக்கு தினமும் 25-30 கிலோ வரை கொடுக்கலாம். ஆடுகளுக்கு தினமும் சராசரியாக 3 முதல் 5 கிலோ வரை கொடுக்க லாம்.இதில் கோ.எப் எஸ் 31 பசுந்தீவனம் 3யில் 2 பங்கு வழங்கலாம், மீதம் ஒரு பங்கு புரத வகை தீவனமான தட்டைபயறு, அகத்தி, சூபாபுல் போன்றவற்றையும் கலந்து கொடுக்கலாம்.

**வேறு என்ன பயிர்வளர செய்ய வேண்டும்?**

மற்ற பயிர்களை போல தான் சாகுபடி முறைகள். வாரம் ஒரு முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பயிரிட்ட 25-30 நாளில் களை எடுக்க வேண்டும். இரசாயன உரங்களை அடியுரமாக போடுவதை விட தொழுஉரமே சிறந்தது.

**ஒரு ஏக்கரில் பயிரிட்டால் எத்தனை ஆடுகள்? மாடுகளுக்கு பயன்படும்?**

ஒரு ஏக்கரில் பயிரிட்டால் 100 ஆடுகள் அல்லது 10 மாடுகளுக்கு போதுமானதாகும். இதனுடைய விதைகளையும் அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 400 கிலோ கிடைக்கும்.

**இந்த தீவனப்பயிர் சாகுபடி செய்ய மானியம் உண்டா?**

பழத்தோட்டங்களில் ( மா, கொய்யா) தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக இந்த கோ.எப்.எஸ் 31 பசுந்தீவனப் பயிரை பயிரிட்டால் ஏக்கருக்கு 3000 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

இது இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கோடைகால பயிறு வகை / எண்ணெய் வித்து பயிர்களில் அழுத்த மேலாண்மை பயிற்சி



கடலூர், ஆக.7

கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரம், ஊத்தங்கால் கிராமத்தில் கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமத்தில் கோடைகால பயிறு வகை / எண்ணெய் வித்து பயிர்களில் அழுத்த மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடேசன் தலைமை வகித்து, வேளாண்மை துறை சார்ந்த தமிழக அரசு வழங்கி வரும் மானியங்கள் குறித்து விவசாயிகளுக்கு கூறினார். நீர் மேலாண்மை பற்றி வேளாண் அறிவியல் நிலையம் பேராசிரியர்கள் காயத்ரி, கலைச்செல்வி விவசாயி களுக்கு பயிற்சி அளித்தனர் மற்றும் கிராம அலுவலரான வேளாண் வளர்ச்சி குழு பயன் பெறுவது குறித்தும் விவசாயி களுக்கு விளக்கம் அளித்தார். பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பிரான்சிஸ், உதவி வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் தங்கதுரை, உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ், பஞ்சமூர்த்தி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# எண்ணெய் வித்து பயிர்களின் அறுவடை பின்செய் தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி




திருச்சி, ஆக.7

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை கீழ் 2024-25 ஆம் ஆண்டு புத்தாநத்தம் கிராமத்தில் எண்ணெய் வித்து பயிர்களின் அறுவடை பின் செய் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் எண்ணெய் செயலாக்கு இயந்திரம் அமைத்தல் மற்றும் சந்தை இணைப்பை உருவாக்குதல் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. இதில் திருச்சி வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) ஆனந்தசெல்வி தலைமை வகித்தார்.

வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) ஆனந்தசெல்வி, பயிர் விளைச்சல் போட்டி பற்றியும் ஆர்வம் உள்ள விவசாயிகளை பயிர் விளைச்சல் போட்டியில் பதிவு செய்ய கேட்டுக் கொண்டார். ஓரே பயிரை சாகுபடி செய்யாமல் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்'தை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும். வனவிலங்குகள் தோட்டத்தில் நுழையா வண்ணம் முள் செடிகள் கொண்ட உயிர் வேலிதனை அமைக்கலாம். வனவிலங்குகள் மூலம் அதிக அளவில் சேதாரம் ஏற்படும் பொழுது வனத்துறையினர் உதவியை நாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டும், கிரியா அறக்கட்டளை முனைவர் கே.சி.சிவ பாலன் பேசும் பொழுது சாகுபடியில் எலிகள் மூலம் ஏற்படும் சேதாரம் 15% ஆகவும், பறவைகள் மூலம் 9% சேதம் ஏற்படுகின்றன. காட்டுப்பன்றிகள் மூலம் பல்வேறு பயிர்களுக்கு ஏற்படும் சேதம் 15-40% சதவிகிதமாக உள்ளது, யானைகள் 20-50%, சதவிகித சேதாரத்தை உண்டு பண்ணுகின்றன.

காட்டெருமைகள் மூலம் 5-10% பயிர் சாகுபடியில் சேதம் ஏற்படுகிறது என சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சாகுபடி சேதாரத்தை ஒருங்கிணைந்த முறைகள் மூலம் மட்டுமே குறைக்க முடியும் என தெரிவித்தார்.

உழவர் உற்பத்தியாளர் குழு தலைவர் ரமேஷ், விவசாயிகள் உற்பத்தியாளர்கள் குழு அமைத்தல் அதன் வழிக்காட்டு முறைகள் அரசு அளிக்கும் மானியங்கள் பற்றி விவசாயி களுக்கு கூறினார். உற்பத்தியாளர்கள் குழுவில் மூலம் உற்பத்தி படுத்தும் பொருட்களை எப்படி சந்தை படுத்துவது மற்றும் எவ்வாறு இணையதள மூலம் விற்பனை செய்யலாம் என்பதனை பற்றியும் விரிவாக விளக்கி கூறினார்.

வேளாண்மை அலுவலர் கண்ணன், வேளாண்மைத் துறையில் அவர்கள் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் சிறப்பு கூறுகளை விரிவாக எடுத்துரைத்தனர்.

பசுந்தாள் விதை இருப்பு அதனின் விதைப்பு முறைகள், உழவன் செயலின் பயன்பாடுகள் மற்றும் தமிழ் மண் வளம் பற்றியும் மத்திய மற்றும் மாநில திட்டங்களில் உள்ள




மானியங்கள், பேட்டரி தெளிப்பான், வரப்பு பயிர் இடுவதின் அவசியம் பற்றியும் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் மற்றும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் இருப்பு பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) புவனேஸ்வரி, அட்மா திட்டத்தில் உள்ள செயல்பாடுகள் கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம், விவசாயிகள் பயிற்சி பற்றியும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் பயன்பாடு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக விளக்கி கூறி நன்றி உரையாற்றினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் மற்றும் பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் 12 கிராமத்தில் உள்ள விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

# இப்கோ- முற்றிலும் நீரில் கரையும் உரங்கள்

**பொட்டாசியம் சல்பேட் - 0:0:50 :** பொட்டாசியம் சல்பேட்டில்50% சாம்பல் சத்தும் 17.5% கந்தக சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை :** ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து காய்வளர்ச்சி பருவத்தி ல்1-2 முறை தெளிக்கவும்.

**இப்கோ என்.பி.கே-18:18:18 (NPK-18:18:18) :** இப்கோ என்.பி.கே-18:18:18இல் 18% தழைச் சத்தும் 18% மணிச் சத்தும் 18% சாம்பல் சத்தும் 6.1% கந்தக சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை :** ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு% தூர் விடும் பருவம்) 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்கவும்.

**இப்கோ என்.பி.கே-19:19:19 (NPK-19:19:19) :** இப்கோ என்.பி.கே-19:19:19இல் 19% தழைச் சத்தும், 19% மணிச் சத்தும் 19% சாம்பல் சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை :** ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து கிளைப்பு / தூர் விடும் பருவம் முதல் பூக்கும் பருவம் வரை 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்கவும்.










**நன்மைகள்**

● இப்கோ என்.பி.கே-19:19:19 நாற்றங்கால் பருவம் முதலே பயிர்களுக்கு பயனபட்டுத்தலாம்.

● பயிர்களின் சீரான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

● பயிர்களின் முளைப்பு திறன் மற்றும் வேரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

● பயிர்களின் உற்பத்தி மற்றும் தரத்தை அதிகரிக்கும்.

● பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

● பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

- ADVT.

# பயறு வகைகளில் வாடல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டார விவசாயிகள் உளுந்து, பச்சைப்பயறு , தட்டைப்பயறு சாகுபடி செய்து வருகின்றனர். பயறு வகைகளில் முக்கியமான நோய்களில் வாடல் நோயும் ஒன்று ஆகும்.

**வாடல் நோய் பரவுவதற்கு சாதகமான சூழ்நிலைகள்**

- மண்ணின் வெப்பநிலை குறைவாக ($25^0$செ.க்கு கீழ்) இருத்தல்.
- குறைந்த மண்ணின் வெப்பநிலை மற்றும் வளர்ந்த முற்றிய செடிகள் 30 சதவிகிதம் மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனிலும், $20^0$ முதல் $30^0$ செ. வரையிலான மண்ணின் வெப்ப நிலையிலும் பூஞ்சைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

**அறிகுறிகள்**

- இந்நோய் பயிரின் அனைத்து வளர்ச்சிப் பருவங்களிலும் காணப்படும்.
- தாக்கப்பட்ட செடிகள் மெதுவாக வாடி காய்ந்து விடும்.
- முதலில் அடியிலைகள் மஞ்சளாகும். பாதிக்கப்பட்ட தண்டுகள் கழுத்துப்பகுதியில் கருப்பு நிறத்துடன் காணப்படும்.
- இவை மேலாகப் பரவி கிளைகளையும் தாக்கும். இதனால் இலைகள் வாடி உதிர்ந்து விடும். கிளைகள் மற்றும் தண்டுகள் காய்ந்து செடி இறந்து விடும்.
- தண்டுப்பகுதியின் உள்ளே சாற்றுக் குழாய் தொகுப்புகள் பழுப்புநிறத்துடன் காணப்படும்.

**மேலாண்மை முறைகள்**

- விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி (4.0 கிராம் / கிலோ) அல்லது கார்பன்டசிம் (2.0 கிராம் / கிலோ) கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும்.
- அடியுரமாக துத்தநாகச் சல்பேட் (25 கிலோ / எக்டர்) மற்றும் வேப்பம் புண்ணாக்கு (150 கிலோ / எக்டர்) இட வேண்டும். தொடர்ந்து துவரை சாகுபடி செய்வதை தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்டு இறந்த பயிர்களை உடனே அகற்ற வேண்டும்.

● ஒரு எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் புளூரசன்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடியை 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது மணலில் கலந்து விதைத்த 30 நாட்கள் கழித்து இட வேண்டும்.

● கார்பன்டசிம் 1 கிராம் /லிட்டர் என்ற அளவில் பாதிக்கப்பட்ட செடிகளின் வேர்ப்பகுதியைச் சுற்றி ஊற்ற வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தியுள்ள இரகங்களை பயிர் செய்து பயன் பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.

# விதைக்குவியல்களின் தரத்தினை உறுதி செய்து விற்பனை செய்திட அறிவுறுத்தல்

காஞ்சிபுரம், ஆக.7

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் விதை விற்பனையாளர்கள் தங்களிடம்இருப்பில் உள்ள அனைத்து உண்மை நிலை (TFL) விதைக்குவியல்களின் தரத்தினை உறுதி செய்து பிறகு விவசாயிகளுக்கு விற்பனை செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆடி மாதத்தில் சம்பா நெல் சாகுபடி, காய்கறிகள், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் பயிரிட மிகுந்த ஏற்ற மாதமாகும். எனவே தான் ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழியும் வழக்கில் இருந்து வருகிறது.

விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் ஆடிப்பட்டத்தில் விதைப்பு மேற்கொள்வார்கள். விவசாயிகளுக்கு தரமான நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விநியோகிம் செய்தல் என்பது அனைத்து விதை விற்பனையாளர்களின் அத்தியாய கடமையாகும். தரமற்ற விதைகளை விற்பனை செய்யும் பட்சத்தில் விதை சட்ட அமலாக்கத் துறை அலுவலர்களால் கடுமையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடதக்கது.

எனவே, அனைத்து தனியார் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள உண்மைநிலை (TFL) விதைக்குவியல்களில் இருந்து 100 கிராம் விதை மாதிரிகள் எடுத்து உரிய பகுப்பாய்வு கட்டணம் மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரத்திற்கு விதை மாதிரிகளை அனுப்பி முளைப்புத்திறனை உறுதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஒருங்கிணைந்த பயிர் நிர்வாகம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



இராமநாதபுரம், ஆக.7

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம், வேளாண்மை துறையின் அட்மா திட்டத்தின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மானாங்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் நிர்வாகம் குறித்து விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சிவகாமி வேளாண்மை உதவி இயக்குனர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை, ராமநாதபுரம் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விதை நேர்த்தி முறைகள், சான்று நிலை விதைகள் பயன்கள், அங்கக சான்று பெறுவதற்கான வழிமுறைகள், பயறு வகை பயிர்களுக்கு இலைவழி டிஏபி கரைசல் தெளித்தல் மற்றும் மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல்,பஞ்சகாவியம் தயார் செய்தல், மேலும் அங்கக வேளாண்மையில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்க உரையாற்றினார்.

பயிற்சியில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரப்பயிர்களின் விதைகள் மானியத்தில் வழங்கப்படுவது விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது. மேலும் நெல் விதைப்பிற்கு முன் பசுந்தளை பயிர்களை சாகுபடி செய்து அவற்றை பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்து பின்னர் நெல் விதைப்பு செய்யும் பொழுது மண்ணின் பௌதிகத் தன்மை மேம்படுத்தப்பட்டு மண்ணின் அங்கக வளம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் இயற்கை முறையில் பயிருக்கு தேவையான தழைச்சத்து கிடைக்கின்றது என பானுமதி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கூறினார்.

பயிற்சி முடிவில் பவித்ரன் உதவி தொழில்நுட்ப மேலாளர் நன்றி உரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சண்முக நாதன் உதவி வேளாண்மை அலுவலர் செய்திருந்தார்.

# மணத்தக்காளி சாகுபடி – ஓர் பார்வை

**தாவரப் பெயர் : சொலானம் நைக்ரம்**
**குடும்பம் : சொலானசியே**



பலராலும் விரும்பிச் சாப்பிடப்படும் கீரை வகைகளில் இம்மூலிகையும் ஒன்று. வெப்ப மண்டல நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது.

தமிழகத்தில் மணற்பாங்கான மற்றும் கரிசல் மண் பூமிகளில் காணப்படுகிறது. பூக்கள் வெண்மையாய் இருக்கும். காய்கள் கருமையாகவும், கரும்பச்சையாகவும் காணப்படும். பழுக்கும்போது சிவப்பு, மஞ்சள், கருப்பு ஆகிய நிறங்களோடு இருக்கும். இதனுடைய இலை, தண்டு, கனி எல்லாவற்றையும் உணவு மற்றும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

ஈரோடு மற்றும் சேலம் போன்ற மஞ்சள் பயிரிடப்படும் பகுதிகளில் மஞ்சளில் முக்கிய களையாக மணத்தக்காளி விளங்குகிறது. விவசாயிகள் அதனை சரியான முறையில் காயவைத்து மூலிகை கம்பெனிகளுக்கு விற்பனை செய்யலாம்.

**பயன்கள்**

மணத்தக்காளியானது வாத நோய், வீக்கம், இருமல், ஆஸ்துமா, மார்ப்புச்சளி நோய், காயம், அல்சர், வயிற்றுப் பொருமல், வயிற்று மந்தம், ஈரல் வீக்கம், காதுவலி, கண் மருத்துவம், வாந்தி, இதய நோய், தொழு நோய், தோல் நோய்கள், காய்ச்சல், மண்ணீரல் வீக்கம், நச்சு தடை மருந்து, ஒவ்வாமை, இதய மருந்து, புண்ணாற்றுமை, செரிமானம், குடலிளக்கி, புத்துணர்ச்சி, மனதை அமைதிப்படுத்துதல் ஆகிய நோய்களுக்கு மருந்தாகவும் மற்றும் சத்து மருந்தாகவும் முழுத் தாவரமும் பயன்படுகிறது.

**மண் மற்றும் காலநிலை**

வெப்ப மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகளில் மணத்தக்காளி நன்கு வளரும். அங்ககத் தன்மை அதிகமுள்ள மண் இதற்கு ஏற்றது. இது வறண்ட, கற்கள் நிறைந்த, மணற்பாங்கான மண்ணில் நன்கு வளரும். ஈரப்பதமுள்ள மணலில் களையாக வளருகிறது. வெப்ப மற்றும் மிதவெப்ப மண்டலத்தில் சாகுபடி செய்யலாம்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

**சாகுபடி**

- விதைகள் மூலமே இது உற்பத்தி செய்யப்படுகிறது.
- எல்லா வகை மண்ணிலும் வளரும். பழங்கள் காய வைக்கப் பட்டு விதைகள் சேகரித்து சாம்பலுடன் கலந்து படுக்கைகள் அமைத்து விதை தூவப்பட வேண்டும்.
- ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படுகிறது.
- தொழு உரம் இடுவது மிகவும் அவசியமாகும்.
- 6 செ.மீ. உயரம் வளர்ந்தவுடன் கன்றுகளை பிரித்து வயலில் நடலாம்.
- தண்ணீர் பாய்ச்சுவது அவசியம்.
- கன்றுகள் 30 செ.மீ. அல்லது 45 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும். நட்ட செடிகள் மூன்று மாத இடைவெளியில் 120 செ.மீ. வரை வளரும்.
- இதனுடைய மொத்த சாகுபடி காலம் 120 நாட்கள் மட்டுமே.

**நீர் நிர்வாகம்**

களை எடுத்தபின் மற்றும் மேலுரம் அளித்த பின் பயிருக்கு மண் அணைத்தல் வேண்டும். வெயில் காலங்களில் 3-4 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும் மற்றும் காய் பருவத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாசனம் செய்ய வேண்டும். அதிக காய்க்கும் தன்மை கொண்டதால் சாயாமல் இருக்க பயிருக்கு முட்டுக்கொடுக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

தண்டுத் துளைப்பான், மாவுப்பூச்சி மற்றும் இலை பிணைக்கும் புழு ஆகியவை பயிரில் காணப்படும். இவற்றைக் கட்டுப்படுத்த மிதமான பூச்சிக்கொல்லிகள் தெளித்தால் போதுமானது. வேர் முடிச்சுப் புழு, வாடல் நோய் ஆகியவற்றை நிலத்தை சுத்தம் செய்தல்இ பயிர் சுழற்சி மற்றும் பயிர் எச்சங்களை எரிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**அறுவடை**

செடிகள் வேருடன் பறிக்கப்பட்டு, வேர் பாகம் தவிர்த்து மேல் பகுதிகளான இலை, தண்டு முதலியன துண்டு துண்டாக வெட்டி காய வைக்க வேண்டும்.

- காய வைப்பதற்கு முன் பழங்களை பறித்து விடுவதன் மூலம் விரைவாக காயவும் மற்றும் பூசானம் ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

● மூன்று நாட்கள் வரை நன்கு காய்ந்தபின் சாக்கு பைகளில் நிரப்ப வேண்டும்.

● காய்ந்த செடியில் ஈரப்பதம் 8மூக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

● சிமெண்ட் களம் மற்றும் தார்பாலின் கொண்டு காயவைப்பதன் மூலம் மற்ற தாவரங்கள்இ மண்இ கல் ஆகியவை கலந்துவிடாமல் தவிர்க்க முடியும்.

● ஒரு ஏக்கருக்கு 1000-1500 கிலோ வரை காய்ந்த மகசூலை எதிர்பார்க்கலாம்.

● தற்போது ஒரு டன் ரூபாய் 30,000 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

**சந்தைப்படுத்துதல்**

● இன்று மருந்து கம்பெனிகளுக்கு இதனுடைய தேவை அதிகமாக உள்ளது.

● பெங்களூருவில் உள்ள நேச்சுரல் ரெமடிஸ் போன்ற நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்வதுடன் ஒப்பந்த சாகுபடியையும் ஊக்குவிக்கின்றன.



● கம்பெனிகளுக்கு அனுப்பும் போது பயிரிட்டதற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். சான்றிதழை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியிடம் இருந்தும் பெறலாம்.





**கட்டுரையாளர்கள் : பி.ஜெய்சங்கர், உதவி பேராசிரியர், தோட்டக்கலைத் துறை, மின்னஞ்சல் : sankarjai03@gmail.com, ஆ.ஹரிதா, மின்னஞ்சல் : menaga2408@gmail.com, ப.சுபபாரதி, மின்னஞ்சல் : pannerselvam5463@gmail.com, நான்காம் ஆண்டு வேளாண் மாணவிகள், புஷ்கரம் - வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை.**



# இந்திய பொதிவாக்க தொழில்நுட்ப கழகப் பயிற்சி



கடலூர், ஆக.7

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மைஅறிவியல் நிலையத்தில் 5.8.24 மற்றும் 6.8.24 இரண்டு நாட்கள் தொழில்நுட்ப கழக பயிற்சி நடைப்பெற்றது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உறுதுணையோடு, இந்திய பொதிவாக்கத் தொழில் நுட்பகழகம், சென்னை நிதி உதவியோடு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் கீழ் செயல்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மேம்படுத்தப்பட்ட உயர்தர பொதிவாக்கத் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் நடைப்பெற்றது. 60க்கும் மேற்பட்ட கடலூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், விழுப்புரம் மாவட்டஉழவர் உற்பத்தி யாளர்கள் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சியில் பேக்கேஜிங் பற்றிய விளக்கமும், காய்கறி, பழங்கள், சமையல் எண்ணெய், பால் பொருட்கள், மசாலா வகைகள், தானியப் பொருட்களை சீராக பேக்கேஜிங் மற்றும் தரக்கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தரக்கட்டுபாடு, பரிசோதனை, விற்பனை முத்திரை மற்றும் பதிவு செய்தல், காப்புரிமை பெறுதல், பேக்கேஜிங் மூலப்பொருள் செய்யும் உற்பத்தியாளர் விவரங்கள் பற்றி இரா.பொன்குமார் (துணை இயக்குநர்), பிரேம் ராஜ் (தொழில்நுட்ப உதவியாளர்), ச.கார்த்திக், வினித் ஆகியோர் விரிவாக இரண்டு நாள் பயிற்சியில் எடுத்துரைத்தனர். இதில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இயக்குநர் மற்றும்வேளாண் அலுவலர்கள் பங்கு பெற்றனர். இப்பயிற்சியை முனைவர் க.நடராஜன், வேளாண் அறிவியல் நிலைய, திட்ட ஒருங்கிணைப்பாளர் துவக்கி வைத்தார். முனைவர்கள் மோதிலால், கண்ணன், ஜெயகுமார், சுகுமாரன், காயத்ரி, கலைச்செல்வி ஆகிய பேராசரியர்களும் பங்கு பெற்றனர். பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் விதைப்பண்ணை அமைக்க இலக்கு

விழுப்புரம், ஆக.7

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் 10,750 ஏக்கர் பரப்பில் விதைப்பண்ணை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் முனைவர் க.பால சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், அரசு மற்றும் தனியார் உற்பத்தியாளர்கள், விதைப்பண்ணை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ரகம் அறிவிக்கப்பட்ட ரகமாகவும், காலக்கெடு நாள் முடிவதற்குள் விதைப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டும்.

விதைப்பறிக்கைகள் பதிவுக்கு ஒரு அறிக்கைக்கு பதிவு கட்டணம் ரூ.25/- பகுப்பாய்வுக்கட்டணம் ரூ.80/-, நெல் மற்றும் சிறுதானியங்களுக்கு வயலாய்வு கட்டணம் ஒரு ஏக்கருக்கு ரூ.100/-, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.80 வீதம் செலுத்திவிதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும்.




இவ்வாறு பதிவு செய்யப்படும் விதைப்பு அறிக்கைகள் சரிபார்க்கப்பட்டு விதைச்சான்று எண் வழங்கப்பட்டு உரிய விதைச்சான்று அலுவலர்களுக்கு வயல் ஆய்விற்காக (2 முதல் 3 வயலாய்வுகள்) ஒதுக்கீடு செய்யப்படும், வயல் ஆய்வில் தேர்ச்சி பெறும் விதைப்பண்ணைகள் அறுவடைக்கு அனுமதிக் கப்படும். அறுவடை செய்யப்பட்ட விதைகளை புதிய கோணிப் பைகளில் பிடித்து அட்டைகள், ஈய வில்லைகள் பொருத்தப்பட வேண்டும்.

விதைச்சுத்திகரிப்பு பணிகள் முடிந்த பின்னர் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தேர்ச்சி பெற் விதைக்குவியல்கள் சான்றட்டை பொருத்தப்பட்டு தமிழ்நாடு சான்று செய்யப்பட்ட தரமான விதைகளாக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**